

# ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்

Ontario

2015 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்

வரவுசெலவுத் திட்டம் 2015:

## ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்

இம்மாகாணம், பிள்ளைப் பருவத்திலிருந்து ஓய்வு பெறும்வரை வாழ்வதற்கு மிகச்சிறந்த இடம் என்பதையும், ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலை உணர்ந்தறியத்தக்க வாய்ப்பினைக்கொண்ட இடம் என்பதையும் உறுதிசெய்வதற்கான ஒரு நான்கு பாகத் திட்டத்தை ஒன்ராறியோ கொண்டுள்ளது.

இத்திட்டமானது மக்களது திறமைகளிலும் திறன்களிலும் முதலீடு செய்கிறது; சாலைகள், போக்குவரத்து போன்ற பொதுமக்கள் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்புகிறது; ஒரு புதுமையான, சக்திவாய்ந்த வணிக சூழலை உருவாக்குகிறது; ஒன்ராறியோவின் பணியாட்கள் ஒரு பாதுகாப்பான ஓய்வுகால வருமானத்தைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், புதிய பணி ஓய்வூதியத் திட்டம் ஒன்றைக் கட்டியெழுப்புகிறது.

2014-15 காலப் பகுதிக்கான பற்றாக்குறை 10.9 பில்லியன் டொலரென இப்போது முன்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது – 2014 வரவுசெலவுத் திட்ட எதிர்வுகூறலுடன் ஒப்பிடும்போது, இது ஒரு 1.6 பில்லியன் டொலர் முன்னேற்றமாகும். மக்கள் தங்கியிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், முக்கிய பொதுமக்கள் சேவைகள் என்பவற்றை வழங்குவதற்கென, சாதுரியமானதும், சிறப்பானதுமான வழிவகைகளைக் கண்டறியவல்ல, விவேகமிக்க நிதிநிர்வாகம் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றுடன், 2017-18 அளவில் பற்றாக்குறையை நீக்குவதற்கு ஒன்ராறியோ உறுதிபூண்டுள்ளது.

சகல ஒன்ராறியோவாசிகளுக்கும் தொழில்களை உருவாக்கும், வாய்ப்புகளை விரிவாக்கும், செல்வச்செழிப்பைப் பாதுகாக்கும் முன்னுரிமை முதலீட்டினூடாக, *2015 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்* ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புகிறது.

மேலும் இதில் அறிக
ONTARIO.CA/BUDGET

## உட்கட்டமைப்பு:

## ஒன்ராறியோ வரலாற்றில் மிகப்பெரும் முதலீடு

10 ஆண்டுகளில், பொது உட்கட்டமைப்பில் முன்னொருபோதுமில்லாத, 130 பில்லியன் டொலருக்கும் அதிகமான முதலீடு ஒன்றினை ஒன்ராறியோ செய்கிறது. அரசாங்கத்தின் சொத்துப் பெறுமதிகளை உச்சப்படுத்தும் திட்டத்திலிருந்து கிடைத்த, எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகமான வருமானம் காரணமாக, ஒன்ராறியோவை முன்னகர்த்தும் திட்டத்துக்கென (Moving Ontario Forward) ஒதுக்கப்பட்ட நிதியை, 10 ஆண்டுகளில் மொத்தம் 31.5 பில்லியன் டொலராக்கும் வகையில், 2.6 பில்லியன் டொலரால் அதிகரிக்கிறது.

- ரொறன்ரோ மற்றும் ஹமில்ரன் பெரும்பாகப் (Greater Toronto and Hamilton Area -GTHA ) போக்குவரத்து வேலைத் திட்டங்களில் சுமார் 16பில்லியன் டொலர்; மற்றும்
- GTHAக்கு வெளியிலான போக்குவரத்து, ஏனைய முன்னுரிமை உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்களில் சுமார் 15 பில்லியன் டொலர்.

தொழில்களை உருவாக்கி, பொருளாதாரத்தை ஊக்குவிக்கக்கூடிய சாலைகள், பாலங்கள், பொதுப்போக்குவரத்து, நீர்த்தொகுதிகள், மருத்துவமனைகள், பாடசாலைகள் போன்ற கட்டமைப்புகளில் 11.9 பில்லியன் டொலரை 2015-16இல் முதலீடு செய்ய ஒன்ராறியோ திட்டமிடுகிறது.

ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, தொழில் உருவாக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மாகாண சொத்துக்களின் பெறுமதியை உயர்த்தி, நிகர வருமானத்தை ட்றில்லியம் ட்றஸ்ரினூடாக (Trillium Trust) பொதுமக்கள் போக்குவரத்துப்பாதை, போக்குவரத்து, ஏனைய முன்னுரிமை உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்களில் முதலீடு செய்யும் ஒரு திட்டத்துடன் அரசாங்கம் முன்னோக்கி நகர்கிறது. அத்திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- பொதுமக்களுக்கான நீடித்த பலாபலன்களையும் தொடர்ச்சியான பாதுகாப்புக்களையும் உருவாக்கும்பொருட்டு, Hydro One உரிமையை விசாலமாக்குதல்.
- பிரதான அமைவுபெற்ற வீட்டு ஆதனச் சொத்துக்கள் பலவற்றை விற்பனை செய்யவென மீள்நோக்குதல்.

# தொழில்களை உருவாக்க, வணிகங்களுடன் பங்காளியாதல்

வெகுமதி மிக்க, உயர்வேதனம் மிக்க தொழில்களை உருவாக்கவும், ஒன்ராறியோவின் வணிகங்கள் வெற்றிபெற்றுவளர உதவுதற்கெனவும் மாகாணம் பின்வருவனவற்றைச் செய்கின்றது:

- 10 வருடங்களில் 2.7 பில்லியன் டொலரை வருவிக்கக்கூடிய புதுமைகளைத் தூண்டி, தொழில்களை உருவாக்கவல்ல அதிக வணிக முதலீடுகளைக் கவர்வதற்கென, தொழில்கள் மற்றும் செழுமை நிதியத்தில் (Jobs and Prosperity Fund) ஒரு மேலதிக 200 மில்லியன் டொலரை முதலீடு செய்தல் மற்றும் வனத்துறைக்கான தகுதிநிலையை நீடித்தல்.
- ஒன்ராறியோவின் தொடக்க முயற்சிகளை அதிகரிக்க உதவும்வகையில் தமது மூலதனம், அறிவு, வலையமைப்பு ஆகியவற்றைக் கொண்டுவரக்கூடிய மூத்த வணிக தலைவர்களின் அனுபவம்மிக்க குழுவொன்றினை ஆரம்பித்து வைக்கவல்ல, ஒரு புதிய புத்தாக்க முன்னெடுப்பின் உருவாக்கத்தில் பங்குபற்றுதல்.
- தொழில்களையும் பூகோளப் போட்டித் தன்மையையும் தக்கவைக்கும் தகுதிமிக்க, பாரிய வடபிரதேசக் கைத்தொழிற் கட்டடங்களுக்கான மின்சார விலை நிர்ணயிப்பு ஆதரவை மார்ச் 2016க்குப் பின்னரும் தொடர்தல்.
- பிராந்திய வர்த்தக, முதலீட்டினை அதிகரிப்பதில் கியூபெக்குடன் பணியாற்றுதல்.

# உயர்திறன் மிக்கதொரு வேலைப் படையை உண்டாக்குதல்

பின்வருவனவூடாக, மாகாணம் இன்று மக்களில் முதலீடு செய்கிறது; நாளைய வலிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான, சரியான திறன்களையும் சரியான தொழில்களையும் ஒன்ராறியோவாசிகள் பெறுவதற்கான ஆதரவை அவர்களுக்குக் கொடுக்கின்றது:

- முன்பள்ளி, முழுநேரப் பாலர் வகுப்பு என்பன தொடக்கம், அனுபவக் கல்விசார் பரீட்சார்த்தச் செயல் திட்டங்களுடன் கூடிய பின் இடைநிலைக் கல்வி, வர்த்தகத் தொழிற் பயிற்சித் திட்டங்கள் ஈறாக, கல்வி மற்றும் வினைத்திறன் பயிற்சியினைத் தொடர்ந்து முன்னேற்றுதல்.
- இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கான மொத்த முதலீடு 565 மில்லியன் டொலருக்கும் மேலாக அமையும் வகையில், அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் ஒன்ராறியோ இளைஞர் தொழில்கள் மூலோபாயத்தில் (Ontario Youth Jobs Strategy), மேலதிகமாக ஒரு 250 மில்லியன் டொலரை முதலீடுசெய்தல்.
- மாணவர்களுக்கான நிதியுதவியினை வலுப்படுத்தும் பொருட்டு, ஒன்ராறியோ மாணவர் உதவித் திட்டத்தினை (Ontario Student Assistance Program) நவீனமயப்படுத்தல்.

# ஒரு நீதியான சமூகம்: ஒன்ராறியோவில் பணிபுரிதலும் வாழ்தலும்

ஒன்ராறியோவாசிகள் தமது முழு ஆற்றலையும் எட்டுவதற்குத் தேவையான ஆதரவையும் வாய்ப்புகளையும் கொண்டுள்ளனர் என்பதை உறுதிசெய்வதே, ஒரு வளமான சமூகத்தை எய்துவதற்கான நிச்சயமான வழி என்பதால், மாகாணம் பின்வருவனவற்றைச் செயற்படுத்துகின்றது:

- வயதுவந்த, ஒன்ராறியோ வேர்க்ஸ் (Ontario Works) உதவிப்பணம் பெறுநர்களுக்கும், ஒன்ராறியோ மாற்றுத்திறன் ஆதரவுக் கொடுப்பனவு (Ontario Disability Support Program) பெறும் மாற்றுத் திறனாளிகளுக்குமான ஒன்ராறியோ சமூக உதவி வீதங்களை ஒரு சதவீதத்தால் மேலும் அதிகரித்தல். மிகக்குறைந்த வருமானங்களைக் கொண்டோரும், பிள்ளைகளற்ற வயதுவந்த ஒன்ராறியோ வேர்க்ஸ் (Ontario Works) உதவி பெறுநர்களும் ஒரு மேலதிக நிரப்பித் தொகையினைப் பெறுவர்.
- இளைஞர் செயற்பாட்டுத் திட்டத்தின் (Youth Action Plan) அடுத்த கட்டத்தை அமுல்படுத்தல் – 2015-16இல் 14 மில்லியன் டொலரில் ஆரம்பித்து, 2016-17இல் அநேகமாக 21 மில்லியன் டொலராக வளரும் ஒரு வருடாந்த முதலீடு - ஆபத்தை எதிர்நோக்கும் இளைஞர்களின் பலாபலன்கள் மேம்படுத்தலை இலக்காகக் கொண்டது.
- *இது ஒருபோதும் பரவாயில்லை: பாலியல் வன்செயல்களையும் தொந்தரவுகளையும் நிறுத்துவதற்கான ஒரு செயல் திட்டம்* (*It's Never Okay: An Action Plan to Stop Sexual Violence and Harassment)* ஊடாக, பாலியல் வன்செயல்களையும் தொந்தரவுகளையும் நிறுத்தி, தப்பியிருப்போருக்கான ஆதரவை மேம்படுத்தல்.
- வருடமொன்றுக்கு ஒரு சராசரி ஐந்து சதவீதத்தால் அல்லது அடுத்த மூன்று ஆண்டுகளில் 750 மில்லியன் டொலருக்கு மேலாக முதலீடுகளை அதிகரிப்பதனூடாக வீட்டு, சமூக பராமரிப்புச் சேவைகளை மேம்படுத்துதல்.
- பணியிலிருக்கும் ஒன்ராறியோவாசிகள் மேலும் பாதுகாப்பான பணி ஓய்வு எதிர்காலத்தைப் பெறுவதை உறுதிசெய்ய உதவும்பொருட்டு, 2017இல், பணியிட ஓய்வூதியத் திட்டத்தை வலுப்படுத்திக்கொண்டும், ஒன்ராறியோ பணி ஓய்வூதியத் திட்டத்தை (Ontario Retirement Pension Plan) அறிமுகப்படுத்திக்கொண்டும் முன்னேறுதல்.

# பொறுப்புடன் நிர்வகித்தல்

தொழில்களை உருவாக்குவதற்கும், வாய்ப்புக்களை விரிவாக்குவதற்கும், சகல ஒன்ராறியோவாசிகளுக்குமான செல்வச் செழிப்பினை உறுதிப்படுத்துவதற்கும் வேண்டிய முதலீடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருக்கும் அதேவேளை, செலவிடப்படும் ஒவ்வொரு டொலருக்கும் இயன்றளவு மிக உயர்ந்த பெறுமதியை வழங்க, ஒன்ராறியோ உறுதிபூண்டுள்ளது. பின்வருவனவூடாக அரசாங்கம் இதனைச் செயற்படுத்துகின்றது:

- அரசாங்கத்தின் ஒவ்வொரு டொலரும் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதைப் பரிசீலித்தல்.
- மேலும் சிறந்த தேர்வுகளை மேற்கொண்டு, விளைவுகளை மேம்படுத்தவென ஆதாரங்களை உபயோகித்தல்.
- சேவைகளை வழங்குவதற்கான மிகச் சிறந்த வழிவகைகளைக் கண்டறியவென அரசாங்கத்தினூடாக உற்று நோக்குதல்.
- நிகழ்ச்சித்திட்டச் சேமிப்புக்களுக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கென ஒரு பல்லாண்டு அணுகுமுறையை மேற்கொள்ளல்.
- கூட்டுப் பேரம்பேசல் செயன்முறையூடாகப் பேசித்தீர்க்கப்பட்ட எந்த மிதமான ஊதிய அதிகரிப்பும், சேமிப்பினால் சரியீடு செய்யப்படுதலை உறுதிப்படுத்தல்.

# 2015 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்

மேலும் இதில் அறிக
ONTARIO.CA/BUDGET
கட்டணமற்ற தொ.பே.: 1-800-337-7222
கேட்டல் குறைபாடுடையோர் கட்டணமற்ற தொ.பே.: 1-800-263-7776

© Queen's Printer for Ontario, 2015

(Tamil)